தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor | Multidisciplinary
Article DOI: https://doi.org/10.63300/tm12012026.20

# S. Kamaraj as a Unique Voice of Karisal Literature: with Reference to the Short Story Collection Oru Vanadevathaiyum Rendu Ponvandukalum

**B.Pandikumar[1*], Dr.Satheeswaran G[2],**
[1]Research Scholar, Departement of Tamil, Kalaslaingam Academy of Research and Education, Krishnankoil, Viruthunagar-626126.
[2]Research Supervisor, Assistant Professor of Tamil, Kalaslaingam Academy of Research and Education, Krishnankoil, Viruthunagar-626126, Email: g.satheeswaran@klu.ac.in.
*Corresponding Author: b.pandikumar@klu.ac.in.

**Article Info:** Received on 27-May-2026, Revised on 29-May-2026, Accepted on 09-June-2026.

## ABSTRACT

The short story collection Oru Vanadevathaiyum Rendu Ponvandukalum holds a significant place in modern Tamil literature, especially within the tradition of Karisal literature. From the pioneering works of writers such as Ku. Alagirisamy and Ki. Rajanarayanan, many authors have portrayed the everyday lives, culture, and experiences of the people living in the Karisal region. However, S. Kamaraj's writings differ from this broader tradition in their strong focus on the lives of oppressed and marginalized communities. Through his stories, he brings to light their struggles, aspirations, and social realities, offering a perspective that is often overlooked. This distinctive approach gives S. Kamaraj a unique place among Karisal writers. By analyzing the short story collection Oru Vanadevathaiyum Rendu Ponvandukalum, this paper highlights the author's contribution to Karisal literature and examines how his portrayal of oppressed communities enriches and expands the scope of the genre.

***Keywords**: Karisal Literature, Land, Oppressed People, Caste, Women.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license https://creativecommons.org/licenses/by/4.0/).

*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*Volume 12, Issue 01 (June-2026)*
www.tamilmanam.in
*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12012026*

# எஸ்.காமராஜ் என்னும் கரிசலின் தனிக்குரல்: ‘ஒரு வன தேவதையும் ரெண்டு பொன்வண்டுகளும்’ நூலை முன்வைத்து

**[1]பா.பாண்டிகுமார்,**

முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, கலசலிங்கம் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், கிருஷ்ணன்கோவில் -626126, தொடர்பு எண் - 9384769221

**[2]முனைவர் ஞா.சத்தீஸ்வரன்**

ஆய்வு நெறியாளர், உதவிப் பேராசிரியர், கலசலிங்கம் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், கிருஷ்ணன்கோவில் -626126, தொடர்பு எண் - 7339527514

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழ் நவீன இலக்கியங்களில் சிறுகதை இலக்கியமானது முக்கியப் பங்கு வகிக்கிறது. அதில் கரிசல் வட்டார இலக்கியமும் ஒன்று. கு.அழகிரிசாமி, கி.ராஜநாராயணன் தொடங்கி இன்று வரையிலும் ஏராளமான எழுத்தாளர்கள் கரிசல் வட்டார மக்களின் வாழ்வியலைக் கதையாக்கி வருகின்றனர். இந்தக் கதைகளின் பொதுப்போக்கிலிருந்து விலகி, ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வைப் பதிவு செய்வதாக அமையும் எஸ்.காமராஜின் எழுத்துகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது. எஸ்.காமராஜ் எழுதிய ‘ஒரு வனதேவதையும் ரெண்டு பொன்வண்டுகளும்’ என்னும் சிறுகதைத் தொகுப்பை அடிப்படையாகக் கொண்டு கரிசல் இலக்கியத்தில் படைப்பாளரின் முக்கியத்துவத்தையும் தனித்தன்மையையும் இக்கட்டுரை ஆராய்கிறது.

**குறிச்சொற்கள்: கரிசல் இலக்கியம், நிலம், ஒடுக்கப்பட்ட மக்கள், சாதி, பெண்**

## முன்னுரை

விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த எழுத்தாளர் எஸ்.காமராஜ் சமகால கரிசல் இலக்கியத்தின் குறிப்பிடத்தகுந்த எழுத்தாளர்களில் ஒருவர். அவரது கருப்பு நிலா கதைகள், ஒரு வனதேவதையும் ரெண்டு பொன்வண்டுகளும், வெயிலின் நியதி ஆகிய சிறுகதைத் தொகுப்புகளும் லாஞ்சனை என்னும் புதினமும் இதுவரை வெளியாகியுள்ளன. சாத்தூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கரிசல் மண்ணில் வாழும் வேளாண் மக்களின் வாழ்க்கையை மையமிட்டதாக இவரது கதைகள் அமைந்துள்ளன. அவர் எழுதிய ‘ஒரு வன தேவதையும் ரெண்டு பொன்வண்டுகளும்’ என்னும் சிறுகதைத் தொகுப்பில் வெளிப்படும் கரிசல் வட்டார வாழ்வியலை ஆராய்வதாக இந்தக் கட்டுரை அமைகிறது.

## கரிசல் இலக்கியம்

கரிசல் இலக்கியம் என்பது நிலவியல் சார்ந்த வட்டார இலக்கியமாக ஆய்வாளர்களால் முன்வைக்கப்படுகிறது. “கரிசல் வட்டாரம் என்பது, கறுப்பு மண்ணைக் கொண்ட மானவாரிப்

, | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 12, Issue 01 (June-2026)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm12012026*

புன்செய் நிலப்பகுதியாகும். மண்ணின் தன்மையின் அடிப்படையில் கரிசல் வட்டாரம் என்ற பெயர் தோன்றியுள்ளது. கரிசல் மண்ணை, 'நெய்க்கரிசல் ' எனவும், 'கரிசல்' எனவும் வேளாண் நிபுணர்கள் பிரிக்கின்றனர்" (கி.ராஜநாராயணன்: 1982) என்கிறார் கரிசல் இலக்கியத்தின் முன்னோடியான எழுத்தாளர் கி.ராஜநாராயணன். மேலும், அவர் "நெல்லை மாவட்டத்தின் கோவில்பட்டி வட்டாரத்தைச் சேர்ந்த வானம் பார்த்த நிலப்பரப்பே கரிசல் சீமை என்றும் கரிசல்காடு என்று அழைக்கப்படுகிறது. கரிசல் பருத்தி வட்டாரம் எனப்படும். இப்பகுதியில் மூன்று மாதங்களே வளம் மிகுந்து காட்சி தரும். அப்போது ஓங்கி உயர்ந்து வளர்ந்து நிற்கும் கம்பும், சோளமும் கண்ணுக்குச் சிறிது விருந்தாகும். கட்டைகுட்டையான பருத்திச் செடிகளும், உடைமரங்களும், கானல்நீரும் இந்த வட்டாரத்தின் சிறப்புத்தன்மைகள்"(மேலது) என்றும் குறிப்பிடுகிறார். ஆனால், கரிசல் இலக்கியம் என்பது கோவில்பட்டியை மட்டும் மையமிட்டதாக அமையாமல், "இது இராமநாதபுரம், மானாமதுரை, இளையான்குடி, பரமக்குடி, பசும்பொன், சூரங்குடி, தூத்தூக்குடி, உருளைக்குடி, பருவக்குடி, இருக்கங்குடி, எட்டையாபுரம், ஒட்டப்பிடாரம், மணியாச்சி, கயத்தாறு, கோவில்பட்டி, இடைசெவல், சங்கரன்கோவில், இராஜபாளையம், சாத்தூர், விருதுநகர், திருமங்கலம், அருப்புக்கோட்டை, உள்ளிட்ட ஊர்கள் அடங்கிய பரந்த நிலப்பரப்பாகும்" (மேலது) என்று ஆய்வாளர்கள் விளக்குகின்றனர். எனவே, கரிசல் இலக்கியம் என்பது இராமநாதபுரம், விருதுநகர், மதுரை, தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி உள்ளிட்ட மாவட்டங்களின் பல்வேறு பகுதிகளை உள்ளடக்கிய கரிசல் மண் சார்ந்த நிலவியலில் வாழும் மக்களால் அம்மக்களின் வாழ்வியல் சார்ந்து எழுதப்படும் இலக்கியம் என்பதை விளங்கிக்கொள்ள முடிகிறது.

**கரிசல் எழுத்தாளர்களும் கதைக்களமும்**

கரிசல் இலக்கியத்தின் முன்னோடிகளாக கு. அழகிரிசாமி, கி.ராஜநாராயணன் ஆகிய இருவரும் குறிப்பிடப்படுகின்றனர். அவர்களைத் தொடர்ந்து பா.செயப்பிரகாசம், மேலாண்மை பொன்னுச்சாமி, ச.தமிழ்ச்செல்வன், பூமணி, சோ.தர்மன் உள்ளிட்ட பலரும் சிறுகதைகளையும் புதினங்களையும் படைத்துள்ளனர். கரிசல் வட்டாரச் சிறுகதைகளைப் பொதுநிலையில் வைத்து ஆராயும்போது அவை பெரும்பாலும் வேளாண் சமுதாயத்தின் வீழ்ச்சியையும் நகரமயமாதல் குறித்த கவலையையும் முதன்மையான கருப்பொருளாகக் கொண்டுள்ளதை உணர முடிகிறது. கி.ராஜநாராயணனின் படைப்புலகை ஆராயும் ச.தமிழ்ச்செல்வன், "கரிசல் கிராமங்களில் உழலும் நடுத்தர விவசாயியின் குரலாகத்தான் அவர் சிறுகதைகள் அத்தனையும் அமைகின்றன. விவசாயியின் பொருளாதார வாழ்க்கையின் இல்லாமையை மட்டும் பேசவில்லை. அரசின் பாராமுகத்தையும் அது விவசாயிகளுக்கு இழைத்துவரும் அநீதிகளையும் பேசினார். அவர்களின் தாம்பத்திய வாழ்வும் பாலியல் தேட்டங்களும் ஏக்கங்களும் சேர்ந்தே எந்தக்கழிப்பும் இல்லாமல் அவர் கதைகளில் இடம்பெற்றன. ஒவ்வொரு மனிதர், ஒவ்வொரு மனுஷியின் தனித்த

பண்புகளையும் இயல்புகளையும் மென்மைகளையும் மேன்மைகளையும் கீழ்மைகளைப் பற்றியும் பேசினார்" (தமிழ்ச் சிறுகதையின் தடங்கள்:2022) என்று வரையறுக்கிறார். இந்த அவதானிப்பு பெரும்பான்மையான கரிசல் வட்டாரப் படைப்பாளர்களுக்கும் பொருத்தமானதாகவே தோன்றுகிறது. "கி.ரா. தன் கதைகளில் தன்னைச் சாதி நீக்கம் செய்தவராக அடையாளப்படுத்திக்கொள்ள எத்தனிக்கவில்லை எனலாம். அது எதுக்குப் பொய்யி... என்று விட்டுவிட்டார் என்று தோன்றுகிறது"(மேலது) என்னும் ச.தமிழ்ச்செல்வனின் கூற்று நிதர்சனம். கரிசல் வட்டாரக் கதைகளில் இந்தச் சாதிய அடையாளம் தவிர்க்க முடியாததாக நிலைபெற்றுள்ளது. கரிசல் இலக்கிய எழுத்தாளர்களாக அடையாளப்படுத்தப்படுபவர்கள் பெரும்பாலும் நிலவுடைமைச் சாதிகளைச் சார்ந்தவர்களாக இருப்பதால் இவர்களது படைப்புகளில் ஒடுக்கப்பட்ட மக்கள் 'மற்றவர்களாகவே' காட்சிப்படுத்தப்பட்டுள்ளனர். எஸ்.காமராஜின் கதைகள் இந்தப் புள்ளியில்தான் மற்ற கரிசல் எழுத்தாளர்களிடமிருந்து மாறுபடுகின்றன.

**எஸ்.காமராஜின் 'ஒரு வனதேவதையும் ரெண்டு பொன்வண்டுகளும்'**

கரிசல் வட்டாரப் படைப்பாளிகளின் கதைக்களங்களில் இருந்து எஸ்.காமராஜின் படைப்புகளின் தனித்தன்மையை 'ஒரு வனதேவதையும் ரெண்டு பொன்வண்டுகளும்' சிறுகதைத் தொகுப்பு வெளிப்படுத்துகிறது. இத்தொகுப்பு 2005-ஆம் ஆண்டு வெளியாகியுள்ளது. வம்சி பதிப்பகம் இத்தொகுப்பினை வெளியிட்டுள்ளது. பதினைந்து கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. அனைத்து கதைகளும் கரிசல் மண்ணை மையமிட்டதாகவும், குறிப்பாகப் பெரும்பாலான கதைகள் எழுத்தாளரின் சொந்த ஊரான சூரங்குடியை மையமிட்டதாகவும் அமைந்துள்ளன.

இத்தொகுப்பில் முதலாவது இடம்பெறும் 'பூச்சிக்கிழவி' என்னும் சிறுகதை ஒரு வயதான மூதாட்டியின் முதுமைக்காலத்தையும், தனது அண்ணனைக் கொன்ற மேலாதிக்கம் கொண்ட சாதியினரைத் தனது துணிச்சலால் அவர் விரட்டி அடித்ததையும் காட்டுகிறது. இந்தக் கதை சிறுவர்களை மையமாகக் கொண்டு கட்டமைக்கப்படுகிறது. கதையில் இடம்பெறும் மற்ற சிறுவர்களைப் போலவே தங்கராசும் பூச்சிக்கிழவியை வம்பிழுப்பவனாக இருக்கிறான். அவனது பாட்டியிடமிருந்து பூச்சிக்கிழவியின் கதையைக் கேட்டறிந்த பிறகு அந்த மூதாட்டியின் மீது அன்பும் மரியாதையும் அவனுக்குத் தோன்றுகிறது என்பதாகக் கதை அமைக்கப்பட்டுள்ளது. மேலோட்டமாகப் பார்க்கும்போது, சிறுவர்களின் விளையாட்டுத்தனம், மூதாட்டியின் எதிர்வினை என்பதாக இக்கதை அமைந்தாலும், ஒடுக்கப்பட்ட சாதியில் பிறந்த பூச்சிக்கிழவி ஆதிக்கச் சாதியினரை எதிர்த்து நின்றதை இக்கதை உணர்த்துகிறது.

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: [https://doi.org/10.63300/tm12012026](https://doi.org/10.63300/tm12012026)*

‘பிள்ளைச் சோறு’ கதையில் சரசு என்கிற பெண்ணின் வழியாகப் பசியின் துயரமும் குழந்தையைக் காக்கும் போராட்டமும் அவளது வலிமிகுந்த வாழ்வும் சித்தரிக்கப்படுகிறது. சொந்த ஊரில் வேலை இல்லாமல் வெளியூர் சென்று வேலை பார்த்து, வாரத்திற்கு ஒருமுறை வந்து செல்லும் அப்பாவும் இக்கதையில் இடம்பெறுகிறார். பசியால் அழும் குழந்தைக்கு சோறு வடித்த நீர் கூடத் தர மனமில்லாதவர்களாக வறட்சியும் வறுமையும் மனிதர்களை மாற்றியிருப்பதைக் கதையின் வழியாக உணர முடிகிறது. அதேவேளை, ஆறு பிள்ளைகளைப் பெற்ற சுந்தரி தாய்மனத்துடன் சேகருக்குச் சோறு கொண்டு வந்து தருகிறாள். கரிசல் நிலத்தும் மக்களின் பசியும் தாயுள்ளத்தின் பரிவும் இக்கதையின் கருப்பொருளாகி இருக்கிறது.

‘நொய்ந்த மனிதர்கள் நொய்ந்த கனவுகள்’ என்னும் சிறுகதையில் வாசனைப் பொருட்கள் எங்கு கிடைத்தாலும் தூக்கிக் கொண்டு வீட்டிற்கு வருபவனாகக் குருவன் என்னும் கதாப்பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது. வாசனைப் பொருட்களைப் பயன்படுத்தும் வழக்கமுடைய நொண்டிக்காலி என்பவனின் மனைவியை இவனுக்கு மிகவும் பிடித்திருக்கிறது. இதனை அறிந்த ஊர் மக்கள் குருவன் அக்கா மாடத்தியிடம், ‘இவனுக்கு ஒரு கால் கட்டுப்போடு’ என்கின்றனர். உடனே கோவிந்தம்மாளைத் திருமணம் செய்துவைக்கின்றனர். அவளும் இவன் நினைத்தது போல் தினமும் வாசனைப் பொருட்கள் பூசுகிறாள். கூலிப்பெண்ணான கோவிந்தம்மாளை கங்காணியும் மேஸ்திரியும் சீண்டுகின்றனர். அவள் தனது மதனியிடம் சென்று அழுகிறாள். மதினி மாடத்தி, “எதிர்த்துக்கொண்டு வாழவும் முடியாது. வேண்டாமென்று ஊரைக் காலி செய்தாலும் போனா இடம் புலி கொண்ட ராஜ்ஜியமாகும். அங்கும் ஒரு தாட்டிக்கமான சாதிக்காரன் இருப்பான். வலுத்தவன் இல்லாத ஊர் எது?” என்று சமாதானம் சொல்லும் மாடத்தி பொடி மட்டையையும், போயிலை சுருட்டையும் வாங்கிக் கொடுக்கிறாள். கோவிந்தம்மாள் வாயில் புகையிலை நாற்றத்தைப் பிடிக்காமல் குருவன் வீட்டிற்கு வராமல் குடித்துவிட்டு அங்கும் இங்கும் அலைந்து திரிகிறான். ஏழை எளிய பெண்கள் தங்களை அழகுப்படுத்திக்கொள்ள முடியாத சூழ்நிலையையும், அழகுப்படுத்திக் கொண்டால் வெறிபிடித்த காமப்பிசாசுகளான ஆதிக்கச்சாதியினருக்கு உணவாகி விடுகின்றனர் என்பதையும் இந்தச் சிறுகதை சித்தரிக்கிறது.

இளமைக்கும் முதுமைக்குமான கால இடைவெளியில் ஒருவனது வாழ்க்கை எவ்வாரெல்லாம் திசைமாறிப் போனது என்பதை ‘முகம் காட்ட மறுத்தான்’ என்னும் சிறுகதை விவரிக்கிறது. பழைய நினைவுகளில் மாரியப்பனின் விளையாட்டுத் திறத்தையும், தற்போது அவன் ஏழ்மையில் வந்து நிற்கும் நிலைமையையும் இக்கதை சித்தரிக்கிறது. கடன்காரர்களின் தொல்லை தாங்க முடியாமல் நண்பனிடம் உதவி கேட்கச் சென்றவன் பேருந்து நிலையத்தில் பிச்சை எடுத்துக்கொண்டிருக்கும் நிலையில் தனது நண்பனைச் சந்திப்பதாக விரியும் இந்தக் கதை

வறுமையின் கொடூரத்தை வாசகருக்குக் கடத்துவதாக அமைந்துள்ளது.

கணவனை இழந்த தாய்க்கும் மகளுக்குமான உறவைப் பேசும் கதையாக 'இன்னொரு கதை' அமைகிறது. தேவாலயத்திற்குச் சென்று தான் விளையாடிய மகிழ்ச்சியான நினைவுகளையும் குடிகாரக் கணவனால் வாதையுறும் அம்மாவின் வாழ்வையும் ஜெனிபா நினைத்துப் பார்ப்பதாக இக்கதை தொடங்குகிறது. கணவனை இழந்த தனது தாயை ஊர் பிறரோடு இணைத்துப் பேசுவதைக் கண்டு மகள் ஜெனிபா தனது அம்மாவை வெறுக்கிறாள். அதனால் படிப்பை நிறுத்திவிட்டு தீப்பெட்டி ஆபீசுக்கு வேலைக்குச் சென்றுவிடுகிறாள். அங்கு பிலவேந்திரன் மீது காதல்வசப்படுகிறாள். அந்தக் காதல் தனது அம்மாவின் உணர்வுகளைப் புரிந்துகொள்ளவும் அதற்கு மதிப்பளிப்பதற்குமான மனமாற்றத்தையும் ஜெனிபாவுக்குத் தருகிறது.

ஒரே அறையில் தங்கியுள்ள இருவரில் ஒருவர் மற்றொருவரால் எவ்வாறு ஏமாற்றப்படுகிறார் என்பதை 'முத்துச்சாமி ஒரு அப்பாவி' சிறுகதை விவரிக்கிறது. கரிசல் மண்ணின் வெள்ளந்தி மனிதர்களின் சித்திரமாக முத்துச்சாமி இக்கதையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளார்.

கிராமங்களில் நிகழும் சாதியத் தீண்டாமையையும் கல்வியின் வழியாக கிடைக்கும் அதிகாரத்தையும் 'மஞ்சுவிரட்டு' சிறுகதை விவரிக்கிறது. வங்கி அதிகாரியாக ஊர்த் திருவிழாவில் சிறப்பு விருந்தினர்களில் ஒருவராகப் பங்கேற்கும் நாராயணன் 'மேலக்காரர்கள், சமையல்காரர்கள், சுத்தக் குறைவானவர்கள், தீட்டுப்பட்டவர்கள் மற்றும் கீழ் சாதிக்காரர்கள்' எல்லோரும் கோவில் வளாகத்தை விட்டு வெளியேறும்படி கேட்டுக்கொள்கிறோம் என்ற அறிவிப்பைக் கேட்டதும் தானாகவே வெளியேறிவிடுவதாகக் கதை தொடர்கிறது.

தள்ளாத முதுமையிலும் கடலை விதைத்து அதனைப் பாதுகாப்பதற்கு இரவுக் காவலுக்குச் செல்லும் குருபாதத் தாத்தாவை மையமாகக் கொண்டு செய்வதை 'பிஞ்சைக்காவல்' சிறுகதை எழுதப்பட்டுள்ளது. கரிசல் காட்டு சம்சாரிகளின் உழைப்பையும் அவர்களது உறுதியையும் இக்கதை விவரிக்கிறது.

பெற்றோர் இல்லாத பேத்தியைப் படிக்க வைப்பதற்கு முதுமை அடைந்த பாட்டிக்கு சமூகத்தில் ஏற்படும் சிக்கல்களை 'அடமானம்' சிறுகதை எடுத்துரைக்கிறது. பன்னிரண்டாம் வகுப்பில் பள்ளியில் முதல் மாணவியாகத் தேர்வு பெறும் சிறுமி தங்கப்பதக்கம் பெறுகிறாள். அந்தப் பதக்கத்தை விற்று அவளைக் கல்லூரியில் படிக்க வைக்க விரும்புகிறார், பாட்டி. ஆனால், தங்கப்பதக்கம் என்பது பெயர் மட்டுமே, அது தங்கம் இல்லை. நமது சமூகத்தில் கல்வி அமைப்பும், ஏழ்மையுடன் போராடி கல்விபெற விளையும் எளிய மக்களின் வாழ்வையும் இந்தக் கதை வெளிப்படுத்துகிறது.

நூலின் தலைப்பாக அமைந்துள்ள ‘ஒரு வனதேவதையும் ரெண்டு பொன்வண்டுகளும்’ சிறுகதையில் ஆண், பெண் இருவரது மனநிலை வெளிப்படுத்தப்படுகிறது. சாலையில் கண்டெடுத்த இரண்டு பொன்வண்டுகள் ஒருவனுக்கு மகிச்சியையும் பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வையும் தருகிறது. அச்சமும் பாதுகாப்பற்ற உணர்வும் கொண்டவளாகக் காட்டப்படும் பெண் அந்தப் பொன்வண்டுகளைப் பார்த்துவிட்டு, ‘நீ என்ன சின்ன நொள்ளையா பூச்சி பொட்டை யெல்லாம் புடிச்சிக்கிட்டு’ எனக் கேட்கிறாள். இருவருக்கும் இடையிலான மன உணர்வுகளை இந்தக் கதை சிறப்பாக எடுத்துரைக்கிறது.

ஏழை-பணக்காரன் அல்லது முதலாளி-தொழிலாளி என்னும் வர்க்கப் பிரச்சனையை அடிப்படையாகக் கொண்டு ‘அதனிலும் கொடிது’ சிறுகதை படைக்கப்பட்டுள்ளது. அப்பாஸ் என்னும் சிறுவன் ஏழ்மையினால் படிப்பைப் பாதியில் கைவிட்ட நிலையில் ஒரு தேநீர்க்கடையில் வேலைக்குச் சேர்கிறான். கடை முதலாளி வாடிக்கையாளர்கள் முன்னிலையில் அவனைத் திட்டும்போது, ‘அண்ணே பொது இடத்தில் திட்டாதீங்க’ என்று அவரை எதிர்த்துப் பேசுகிறான். அனைவரது முன்னிலையிலும் தன்னை அவன் எதிர்த்துப் பேசியதை அவமானமாக உணர்ந்த முதலாளி அவனைக் குப்பை கொட்டும் இடத்திற்கு கொண்டு சென்று தாக்குகிறார். முதலாளி தொழிலாளியை தரக்குறைவாக நடத்துவதும் அவமதிப்பதும் இயல்பானதாகவும், அதனைத் தொழிலாளி மறுப்பது அவமானத்துக்கு உரியதாகவும் பார்க்கப்படுவதை இந்தக் கதை சித்தரிக்கிறது.

கனியண்ணன் என்னும் நேர்மையும் உறுதியும் மிக்க ஓவியரையும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் காளிமுத்துவையும் பற்றியதாக ‘மறு தோன்றிய நினைவுகள்’ சிறுகதை அமைகிறது. காளிமுத்துவின் தாய்ப்பாசத்தையும், தனது ஓவியத்திறனால் அவனது ஆதிக்கத் திமிரை மட்டுப்படுத்தும் கனியண்ணனின் படைப்பாற்றலையும் இந்தக் கதை எடுத்துரைக்கிறது.

கடும் வறட்சியினால் ஏற்பட்ட கொடும்பசியை மையமிட்டதாக ‘பசி’ என்னும் சிறுகதை அமைந்துள்ளது. கிராமத்து மக்கள் பசிக்காகத் தங்கள் வீட்டில் வளர்த்த விலங்குகளையே கொன்று தின்கின்றனர். இந்தக் கதையில் வறுமையும் பசியும் காட்சிப்படுத்துப்படுவதைப் போலவே நிலவுடைமையாளர்களான ஆதிக்கச்சாதியினரின் சுரண்டலும் வெளிப்படுத்தப்படுகிறது.

இந்தத் தொகுப்பில் இடம்பெறும் கதைகளில் மிகுந்த எள்ளல் தொனியில் எழுதப்பட்ட கதை ‘கொம்பு’ என்னும் சிறுகதை. தமிழ்வாணன் என்பவருக்கு தலையில் கொம்பு முளைத்துவிடுகிறது. அதனால் அவர் பணி செய்யும் இடத்திலும் உறவினர்களிடமும் கேலிக்குள்ளாகிறார். இதனால் அனைவரிடமிருந்தும் ஒதுங்கியே இருந்து ‘மனுசரண்டாதவராக’ மாறிவிடுகிறார். ‘கொம்பு

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12012026*

முளைத்தல்' என்னும் கற்பனையின் வழியாக ஒருவரது உருவத்தைப் பார்த்து கேலி செய்வது தவறு என்னும் கருத்தை இக்கதை பதிவு செய்கிறது.

கரிசல் மண்ணின் தவிர்க்க முடியாத வாழ்வியலாக மாறிப்போயுள்ள குடிகாரக் கணவன் தனது மனைவியைக் கொடுமைப்படுத்துவதை மையமாகக் கொண்டு 'காணாமல் போன சாமி' என்னும் சிறுகதை பின்னப்பட்டுள்ளது. சங்கரன் என்னும் குடிகாரக் கணவனுக்கு வாழ்க்கைப்பட்ட சின்னக்காள், தனது கணவனால் தொடர்ந்து அவமதிப்புக்கும் தாக்குதலுக்கும் உள்ளாகிறாள். நிராதரவான நிலைக்குத் தள்ளப்படும் அவள் கல்மண்டபத்தில் உள்ள பிள்ளையாரிடம் சென்று தனது கவலைகளையும் கணவனின் கொடுமைகளையும் முறையிடுகிறாள். வறட்சி, வறுமை, பசி என்னும் துன்பியலான வாழ்வுக்குள் அல்லல்படும்போதும் கணவன்கள் தங்களது மனைவியரை எவ்வாறு சுரண்டுகின்றனர், அவமானத்திற்கும் கொடுமைக்கும் உள்ளாக்குகின்றனர் என்பதை இக்கதை விவரிக்கிறது.

**கரிசல் இலக்கியத்தில் எஸ்.காமராஜின் தனித்துவம்**

'ஒரு வனதேவதையும் ரெண்டு பொன்வண்டுகளும்' தொகுப்பில் இடம்பெற்றுள்ள கதைகள் கரிசலின் மற்றொரு தளத்தை அல்லது பரிணாமத்தை முன்னிறுத்துவதாக அமைகின்றன. கரிசல் இலக்கியப் படைப்பாளிகளால் பெரும்பாலும் பேசப்படாத ஒடுக்கப்பட்டோரின் வாழ்க்கையை மையமாகக் கொண்டு இக்கதைகள் படைக்கப்பட்டுள்ளன. மற்ற படைப்புகளில் உள்ளதைப் போல மற்றமைகளாக அல்லாமல் ஒடுக்கப்பட்ட மக்களின் தன்னிலைகளை அடிப்படையாகக் கொண்டு இக்கதைகள் புனையப்பட்டுள்ளன. கரிசல் மண்ணின் மைந்தர்களான ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைப்பாடுகள், அவர்களது உழைப்பு, கொண்டாட்டம், சடங்குகள், நம்பிக்கைகள், வறுமை, பசி, தீண்டாமை, ஒதுக்கப்படும் துயரம், சுரண்டல் உள்ளிட்ட அனைத்தையும் உள்ளடக்கியதாக இக்கதைகள் அமைகின்றன. கரிசல் இலக்கியப் பிதாமகர்களால் எழுதப்பட்ட அதே கதைக்களம் எஸ்.காமராஜின் சொற்களில் வேறொன்றாகப் பரிணமிக்கிறது.

சான்றாக, பசியுடனான கரிசல் மக்களின் போராட்டம் இவ்வட்டார எழுத்தாளர்கள் அனைவராலும் மீண்டும் மீண்டும் எழுதப்பட்டுள்ளது. "குதிங்காலிட்டு உட்கார்ந்தான், சப்பணமிட்டு அமர்ந்து பார்த்தான், ஒரு காலை சப்பணமிட்டு ஒரு காலை நீட்டி இப்படியும் அப்படியுமாய் உட்கார்ந்து பார்த்தான். ம்கூம். எப்படி உட்கார்ந்தாலும் பசித்தது"(வெயிலோடு போய்: 1990) என்று ச.தமிழ்ச்செல்வன் எழுதிச் செல்கிறார். அதே பசியை எஸ்.காமராஜும் எழுதுகிறார். ஆனால், கி.ராஜநாராயணனில் தொடங்கி கரிசல் படைப்பாளிகள் அனைவராலும் எழுதப்பட்ட 'பசி' வெறுமனே பொருளாதாரப் பிரச்சனையாக, வறுமையே அதன் காரணமாகச்

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12012026*

சித்தரிக்கப்பட்டுள்ளது. கடுமையான வறட்சியே அதன் மூலக்காரணமாகவும், மழை பொழிந்து விவசாயம் செழித்தால் இந்தப் பசி மாறிவிடும் என்பதும் அக்கதைகளில் உள்ளார்ந்த நம்பிக்கையாக வெளிப்படுகின்றன.

எஸ்.காமராஜின் கதைகளில் பசி என்பது வெறுமனே பொருளாதாரம் சார்ந்த சிக்கலாக அல்லாமல் சாதி என்னும் கருத்தாக்கத்துடன் அதற்குள்ள தொடர்பும் முதன்மைப்படுத்தப்படுகிறது. "கூலிக்கு மாரடிக்கிற பொழப்பு, ஊரே சம்சாரிகளை அண்டிப் பிழைப்பு நடத்திக் கொண்டிருந்தது. இப்போது ஓசி வேலைகளும் இல்லை, கூலி வேலைகளும் அறவே இல்லை. கிடைக்கும் என்கிற நம்பிக்கையும் இல்லை. பஞ்சம் இல்லாத காலங்களில் வேலை இல்லை என்றால் அப்படியே காலாற சம்சாரி வீட்டுப் பக்கம் போய முகத்தைக் காட்டினால் போதும். ஏதாவது சின்னச் சின்ன வேலை கொடுத்து, பொழுது போகிற நேரம் கொஞ்சம் பழைய சோறும், கொஞ்சம் தவசமும் கொடுத்தனுப்புவார்கள். அதை வைத்து பொழுதைக் கழித்து விடலாம். இப்போது கிட்டத்தட்ட சம்சாரிக பொழப்பும் நாறிப்போய் கிடக்கிறது" (ஒரு வனதேவதையும் ரெண்டு பொன்வண்டுகளும்:2005) என்பதாக பசி என்னும் கதை நீள்கிறது. கரிசல் நிலத்தில் நிலவுடைமைச் சாதிகளுக்கு வறுமை என்பது மழை பொய்த்துப்போவதால் நிகழ்வது; ஆனால், ஒடுக்கப்பட்டோரது பசி நிரந்தரமானது. வெள்ளாமை செழித்த காலத்திலும் நிலமற்ற அம்மக்கள் உழைப்புச் சுரண்டலுக்கு உட்படுத்தப்படுகின்றனர். ஆனால், உழைப்புக்கேற்ற ஊதியம் வழங்கப்படுவதில்லை. ஒரு வனதேவதையும் ரெண்டு பொன்வண்டுகளும் தொகுப்பில் இடம்பெறும் கதைகள் அனைத்திலும் இந்த வறுமையும் பசியும் நிழல் போல தொடர்கின்றன.

கரிசல் நிலத்துப் பெண்களை உறுதியானவர்களாகவும் போர்க்குணம் மிக்கவர்களாகவும் எஸ்.காமராஜ் காட்சிப்படுத்துகிறார். சாதிய ஒடுக்குமுறைக்கு உள்ளான ஒரு சமூகத்தில் பிறந்த 'பூச்சிக்கிழவி' ஆதிக்கச் சாதியினரை அச்சமூட்டுபவளாக இவரது கதைகளில் உருப்பெறுகிறார். தாளாத வறுமையிலும் ஒரு தாய் இன்னொரு தாயின் பிள்ளைக்கு உணவூட்டுகிறாள். ஒடுக்கப்பட்டோரின் வாழ்வினை முன்வைக்கும்போதும் அது கழிவிரக்கம் தேடுவதாக அல்லாமல் அவர்களது தனித்துவமான வாழ்வை முன்வைப்பதாக அமைந்திருப்பதே இவரது புனைவுகளின் தனித்தன்மையாக அமைகிறது.

**முடிவுரை**

கரிசல் இலக்கிய வரலாற்றில் எழுதப்பட்டுள்ள சிறுகதைகளுள் எஸ்.காமராஜின் தனித்துவமான இடத்தை 'ஒரு வனதேவதையும் ரெண்டு பொன்வண்டுகளும்' சிறுகதைத் தொகுப்பின் வழியாக இக்கட்டுரை நிறுவியுள்ளது. ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை

மையமாகக் கொண்டு படைக்கப்பட்டுள்ளதால் இக்கதைகள் முந்தைய எழுத்தாளர்களால் படைக்கப்பட்ட கதைகளிலிருந்து மாறுபடுகின்றன. கரிசல் மண்ணில் நிலவும் உழைப்புச் சுரண்டல், சாதிய ஒடுக்குமுறை, பாலியல் சுரண்டல் உள்ளிட்டவற்றைத் தனக்கே உரித்தான புனைவுமொழியில் தனது சொந்த ஊரான சூரங்குடியைக் கதைக்களமாகக் எஸ்.காமராஜ் எழுதிச் செல்கிறார். மற்றமைகளாகப் படைக்கப்பட்டிருந்த ஒடுக்கப்பட்ட மக்களைக் கரிசல் இலக்கியத்தின் மையத்திற்குள் கொண்டு வந்து, அவர்களது வாழ்க்கைப் பாடுகளைப் புனைவாக்கியதின் வழியாக எஸ்.காமராஜ் தனித்து ஒலிக்கும் குரலாக உருப்பெறுகிறார்.

**துணைநின்ற நூல்கள்**

[1]. எஸ்.காமராஜ், 2005, ஒரு வனதேவதையும் ரெண்டு பொண்வண்டுகளும் , வம்சி புக்ஸ், திருவண்ணாமலை.
[2]. கி.ராஜநாராயணன்,1982, வட்டார வழக்குச் சொல்லகராதி, அன்னம் (பி.லிட்), சிவகங்கை.
[3]. ச.தமிழ்ச்செல்வன் ,1990, வெயிலோடு போய், சென்னை புக்ஸ், சென்னை.
[4]. ந.முருகேசபாண்டியன்,2022, நவீன சிறுகதைப் படைப்பாளுமைகள், பாவை பிரிண்டர்ஸ் (பி.லிட்), சென்னை.
[5]. ச.தமிழ்ச்செல்வன்,2022,தமிழ்ச்சிறுகதையின் தடங்கள், பாரதி புத்தகாலயம், சென்னை.
[6]. க.பஞ்சாங்கம்,2017,புதிய வெளிச்சத்தில் தமிழ் இலக்கிய வரலாறு, அன்னம், தஞ்சாவூர்.
[7]. விஜயலட்சுமி ராசாபுரம்,1995,வட்டார இலக்கியமும் கி.ராஜநாராயணனும், அன்னம்(பி.லிட்), சென்னை.
[8]. கா.சிவத்தம்பி,1967, தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும், பாரி நிலையம், சென்னை.
[9]. கி.ராஜநாராயணன்,1978, கதவு, அன்னம் வெளியீடு, சிவகங்கை.

**References:**

1. S. Kamaraj (2005), *Oru Vanadevathaiyum Rendu Ponvandukalum*, Vamsi Books, Tiruvannamalai.
2. Ki. Rajanarayanan (1982), *Vattara Vazhakku Sollakarathi*, Annam Publications, Sivagangai.
3. S. Tamilselvan (1990), *Veyilodu Poi*, Chennai Books, Chennai.
4. N. Murugesapandian (2022), *Naveena Sirukathai Padaippalumaigal*, Paavai Printers (P) Ltd., Chennai.
5. S. Tamilselvan (2022), *Tamil Sirukathaiyin Thadangal*, Bharathi Puthakalayam, Chennai.
6. K. Panchangam (2017), *Puthiya Velichathil Tamil Ilakkiya Varalaru*, Annam Publications, Thanjavur.
7. Vijayalakshmi Rasapuram (1995). *Vattara Ilakkiyamum Ki. Rajanarayananum*, Annam Publications, Chennai.
8. K. Sivaththamby (1967), *Tamilil Sirukathaiyin Thotramum Valarchiyum*, Pari Nilayam, Chennai.
9. Ki. Rajanarayanan (1978), *Kathavu*, Annam Publications, Sivagangai.